செ.வெ.எண்:29/ஜனவரி நாள்: 20.01.2016

**வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் காலியாக உள்ள 329 இளநிலை பயிற்சி அலுவலர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட உள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் காலியாக உள்ள 329 இளநிலை பயிற்சி அலுவலர் ( சம்பள ஏற்ற முறை 9300-34800 + 4200 GP ) பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட இருக்கிறது.

பட்டயபடிப்பு மற்றும் மேல்நிலை வகுப்பு முடித்தவர்களுக்கு வயது வரம்பு இல்லை. மேல்காணும் பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் Online முகவரி www.skilltraining.tn.gov.in மூலம் விண்ணப்பிக்கலாம். இது குறித்த அனைத்து விவரங்களும் மேற்காணும் Online முகவரியில் உள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளோர் Online-ல் விணண்ப்பித்தவர்கள் Online Application மற்றும் விண்ணப்பித்த விவரங்களை பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வரிடம் சமர்ப்பிக்கவும். விணணப்பிக்க கடைசி நாள் 01.02.2016 ஆகும். இது குறித்து மேலும் விவரம் அறிய பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய தொலைபேசி எண் 04564 231300 அல்லது பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நேரில் வந்து விவரம் அறிந்துக்கொள்ளலாம் .

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**